# நமது தாய்மொழி

ஆசிரியர் :

ந. சி. கந்தையா பிள்ளை

இளைஞர் தமிழ்ச் சங்கம்,
பாகனேரி.

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

பவழக்காரத் தெரு : : சென்னை-1

பதிப்புரிமை] [விலை அணா 8

முதற் பதிப்பு, அக்டோபர் 1948.

THE PROGRESSIVE PRINTERS
:: G. T. MADRAS. ::

# முன்னுரை

ஒவ்வொருவரும் தமது தாய்மொழியைப் பற்றிய வரலாற்றை அறிந்திருப்பது அவசியம். நமது அன்னை நமக்குப் பாலூட்டுங் காலம் முதல் கற்பித்த மொழி நமது இரத்தத்தோடு கலந்துள்ளது. அது பற்றியே எல்லோருக்கும் தமது தாய்மொழியிடத்து அளவிறந்த பற்று உண்டாகியிருக்கின்றது. நமது நாடு, மொழி என்பவைகளின் வரலாறு பழங் கதைப் போக்கில் எழுதப்பட்டு வந்தன. ஆராய்ச்சி முறையான கல்வி பரவி வருகின்ற இக்காலத்தில் அவை ஏற்றனவாகத் தோன்றவில்லை. நமது நாடு, மொழி என்பவைகளைக் குறித்து ஆராய்ச்சிவல்ல அறிஞர் பலர் எழுதியுள்ளனர். அக்கருத்துக்களை எல்லாம் சுருக்கிச் சிறுவரும் கற்றறியும் வகையில் இந் நூலகத்துத் தந்துள்ளோம். இந் நூலகத்துக் கூறப்பட்ட ஒவ்வொரு முடிவுக்கும் தக்க ஆதாரங்கள் உள்ளன. பொது மக்களும் சிறுரும் பயில்வதற்கென இந் நூல் ஆக்கப் பட்டமையின் அம்மேற் கோள்களை இங்குத் தவிர்த்துள்ளோம்.

சென்னை
1—11—1948 } ந. சி. க.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | தோற்றுவாய் .... | 1 |
| 2. | தமிழின் பழமை .... | 1 |
| 3. | தமிழின் பரப்பு .... | 2 |
| 4. | மிகப்பழைய காலத்தில் தமிழ் நாட்டெல்லை | 3 |
| 5. | தமிழ் நாட்டெல்லை சுருங்குதல் .... | 5 |
| 6. | திராவிடம் என்னும் சொல் .... | 7 |
| 7. | விந்தியத்திற்குத் தெற்கிலும் மொழி மாறுபடுதல் .... | 7 |
| 8. | தமிழ் நூல்கள் குறிப்பிடும் எல்லை .... | 9 |
| 9. | மொழி தோன்றும் வகை .... | 10 |
| 10. | எழுத்து நிலை .... | 11 |
| 11. | முத்தமிழ் .... | 13 |
| 12. | தமிழ்ச் சங்கம் .... | 16 |
| 13. | முதற் சங்கம் .... | 16 |
| 14. | இரண்டாஞ் சங்கம் .... | 17 |
| 15. | மூன்றாஞ் சங்கம் .... | 17 |
| 16. | செந்தமிழ் .... | 18 |
| 17. | திசைச் சொல் .... | 20 |
| 18. | வடசொல் .... | 20 |
| 19. | மொழிகளில் புதிய புதிய ஒலிகள் .... | 21 |
| 20. | சமக்கிருதம் .... | 22 |
| 21. | சங்க நூல்கள் .... | 23 |
| 22. | அகம் .... | 24 |
| 23. | புறம் .... | 25 |
| 24. | தமிழில் வடசொல் கலத்தற்குரிய காரணம் | 27 |
| 25. | மணிப்பிரவாளம் .... | 28 |
| 26. | பிற்கால நூல்களின் இலக்கு .... | 29 |
| 27. | சமயப் பாடல்கள் .... | 30 |
| 28. | மொழி பெயர்ப்பு நூல்கள் .... | 31 |
| 29. | உரை ஆசிரியர்கள் .... | 32 |
| 30. | வசன நடை ... | 32 |
| 31. | உரையாசிரியர் காலத்து வசன நடை .... | 34 |
| 32. | உரைநடை வரலாறு .... | 35 |
| 33. | முற்காலக் கல்வி முறை .... | 42 |

# நமது தாய்மொழி

## தோற்றுவாய்

தாய்மொழி என்பதற்குத் தாய் தனக்குக் கற்பித்த மொழி, அல்லது நாட்டுக்குரிய மொழி எனப் பொருள் கொள்ளலாம். நமது நாட்டுக்குரிய மொழி தமிழ். தமிழ், தென்னிந்தியாவின் கிழக்கிலும், இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலும், தமிழர் சென்று குடியேறியுள்ள மலாயா, தென்னபிரிக்கா, மொரிசஸ் முதலிய பலவிடங்களிலும் வழங்குகின்றது. இம்மொழியின் பழமையைப் பற்றியும் பிற சிறப்புக்களைப்பற்றியும் இச்சிறிய நூலிற் படிப்போம்.

## தமிழின் பழமை

தமிழ் மிகமிகப் பழைய மொழி. அது எக்காலம் முதல் தோன்றி வழங்குகின்றதென எவராலும் அறிந்து கூறமுடியாது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளின்முன் தமிழ்ச் சொற்கள் சில பலத்தீன நாட்டு மொழியாகிய எபிரேயத்தில் சென்று வழங்கின. கிரேக்க மொழியிலும் பல தமிழ்ச்சொற்கள் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளின் முன் சென்று வழங்கின.

இவ்வுலகில் மிகப் பழமையே பல சாதியினர் நாகரிக உயர்வுபெற்று விளங்கினர்கள். அவர்கள் வழங்கிய மொழிகளிற் பல, பேச்சு வழக்கற்று இலக்கிய வழக்கில் மாத்திரம் உள்ளன; சில இரு வழக்கும் அற்று இறந்தொழிந்தன. தமிழ் மொழி ஒன்று மாத்திரம் பழமைபோல் இன்றளவும் தனது இளமைத் தன்மை குன்றாததாய் இரு வழக்கிலும் இயலுகின்றது. இக்கருத்தினைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்,

பல்லுயிரும் பலவுலகும்
  படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
  இருந்தபடி இருப்பதுபோல்
..................................
..........................உலக வழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
  சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே

என அழகு பெறக் கூறியுள்ளார்.

## தமிழின் பரப்பு

தமிழ், உலகின் பெரும் பகுதியில் வழங்கிற்று என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். உலகில் ஆங்காங்கு வழங்கிய பல மொழிகள் அமைப்பில் தமிழுக்கு உறவுடையனவாகக் காணப்படுகின்றன. தமிழ்ச்சொல் மூலங்கள் பலவும் அவைகளில் காணப்படுகின்றன. மிகப் பழங்காலத்தில் ஐரோப்பாவில் வழங்கிய இடப்பெயர்கள் ஆற்றுப் பெயர்கள் பல தமிழாயிருத்தலை, ஜெர்மன் ஆசிரியர் ஒரு

வர் எடுத்து விளக்கியுள்ளார். மேற்கு ஆசியாவிலே வழங்கிய மிகப் பழைய சுமேரிய மொழியில் தமிழ்ச் சொற்கள் பல காணப்படுகின்றன. இவை போன்ற சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டு சிலர் உலகம் முழுமையிலும் ஒருகால் தமிழ் வழங்கிற்று எனக் கூறுவர். இக்கருத்து ஆராய்ச்சிக்குரியது.

“சதுமறை ஆரியம் வருமுன் சகமுழுது நினதாயின்
முதுமொழி நீயநாதியென மொழிகுவதும் வியப்பாமே”

என்பது மனோன்மணியப் பாடல்.

## மிகப் பழைய காலத்தில் தமிழ் நாட்டெல்லை

மிகமிகப் பழைய காலத்தில் இமயமலை முதல் கன்னியா குமரி வரையில் ஒரே மொழி வழங்கிற்று. அம் மொழி தமிழ். ஆப்கானிஸ்தானத்தில் பிராகூய் என்னும் மொழி வழங்குகின்றது. இது தமிழுக்கு உறவுடையது. வேத மொழியில் பல தமிழ்ச் சொற்கள் காணப்படுதலை ஆராய்ச்சி வல்லார் காட்டியுள்ளார்கள். ஆரிய மக்கள் இந்திய நாட்டை அடைவதன்முன் அங்குத் திராவிட மக்களே வாழ்ந்தார்கள் என ஆராய்ச்சியாளர் ஒருமுகமாகத் துணிந்துள்ளார்கள்.

ஐயாயிரம் ஆண்டுகளின்முன் சிந்து ஆற்றுவெளிகளில் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்தார்கள். அம்மக்கள் அமைத்து வாழ்ந்த நகர்களின் அழிபாடுகள் சிலகாலத்திற்குமுன் வெட்டி ஆராயப்பட்டன. அங்குப் பழம் பொருள்கள் பல கிடைத்




தன. அப்பொருள்கள் அங்கு வாழ்ந்த மக்கள் திராவிடர் என்பதை வெளியிடுகின்றன. ஒருவகைச் சுண்ணாம்புக்கல்லில் வெட்டப்பட்ட முத்திரைகள் அங்குக் காணப்பட்டன. அவைகளில் அக்கால மக்கள் வழங்கிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள் ளன. அவ்வெழுத்துக்களை ஹெரஸ் என்னும் ஸ்பானியர் ஒலிமுறையாக வாசித்தார். அவ்வாசிப் பில் காணப்படும் சொற்கள் பல இன்றும் தமிழ் மொழியில் வழங்கும் சொற்களாகக் காணப்படு கின்றன. இவைபோன்ற பல காரணங்களால் இந்திய நாடு முழுமையிலும் ஒருகாலத்தில் தமிழ் வழங்கிற்று எனத் துணியப்படுகின்றது. எச். ஜி.


வெல்ஸ் போன்ற மேல்நாட்டு ஆராய்ச்சிப் பேரா சிரியர்களும் இக்கருத்துடையராய் ஆரிய மக்கள் வருகைக்குமுன் இந்தியநாடு முழுமையும் திராவிட மொழி வழங்கிற்று எனக்கூறியதோடு அமையாது படமும் அமைத்துக் காட்டியுள்ளார்கள்.

## தமிழ் நாட்டெல்லை சுருங்குதல்

நாலாயிரம் ஆண்டுகளின்முன் மத்திய ஆசியா வினின்றும் ஒரு புதிய மக்கட் கூட்டத்தினர் இந்தி யாவை அடைந்தார்கள். அவர்கள் ஆரியர் எனப் பெயர் பெறுவர். அவர் சிந்து ஆறும் அதன் கிளைகளுமாகிய ஐந்து ஆறுகள் பாய்கின்ற பகுதி களில் தங்கி வாழ்ந்தார்கள். அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கும் புதிய மக்களுக்கு மிடையே சிலகாலம் போர்கள் நடந்தன. பின்பு இரு இன மக்களும் இணைந்து ஒன்றுபட்டார்கள். இதனால் இரு இன மக்களின் கொள்கைகளும் மொழிகளும் கலந்தன. வடக்கே வழங்கிய தமிழ் சிறிது சிறிதாக மாறுபட்டுப் பற்பல மொழிகளா யிற்று. திரிபடைந்த இம்மொழிகளையே மக்கள் பேசப் பயன்படுத்தினர். இலக்கிய மொழி ஆரிய மாக இருந்துவந்தது. இன்று ஆங்கிலம் இந்திய மக்கள் எல்லோருக்கும் பொதுமொழியாக இருப் பதுபோல அக்காலத்தில் ஆரிய மொழி வடநாட்டு மக்கள் எல்லோருக்கும் இலக்கிய மொழியாக இருந்துவந்தது. விந்திய மலைக்கு வடக்கே வாழ்ந்த மக்கள் தமது தாய்மொழி ஆரியம் எனக் கொண்

டார்கள். கி. மு. 1000 வரையில் விந்திய மலைக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நாடுகள் ஆரியா வர்த்தம் என்னும் பெயரைப் பெற்றன.

"இன்று சமக்கிருதம் சம்பந்தப் பட்டவை எனக் கொள்ளப்படும் வடநாட்டு மொழிகள் அமைப்பில் தமிழாகவும் சொல்வகையில் ஆரியமாக வுங் காணப்படுகின்றன. வடநாட்டு மொழிகளில் எழுதப்பட்டுள்ள வசனங்களைச் சொல்லுக்குச்




சொல் தமிழ்ச் சொற்களை வைத்து மொழி பெயர்த்து விடலாம். ஒரு மொழி எம்மொழிக்கு இனமுடையதென அறிவது அதன் அமைப்பைக் கொண்டு; சொற்களைக் கொண்டன்று. ஒரு மொழியின் அமைப்பு அல்லது இலக்கணம் ஆற்றின் இரு மருங்குமுள்ள அணைகள் போன்றது.

சொற்கள் அவ்வணைகளினிடையே ஓடும் நீரைப் போன்றவை. நீர் மாறுபடுவது போலச் சொற்கள் மாறுபடலாம். அவைகளின் அமைப்பு மாறு படாது,'' என ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்கள். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகள் வரையில் தமிழ் நாட்டின் வட எல்லை விந்திய மலையாக விருந்தது.

## திராவிடம் என்னும் சொல்

கிறித்துவுக்கு முற்பட்ட காலம் முதல் திரா விடம் என்னும் சொல் வடமொழி நூல்களில் வழங்கப்பட்டுள்ளது. இச் சொல் பிற்காலத்தில் பெரும் மயக்கம் அளிப்பதாயிற்று. திராவிடம் என்பதிலிருந்து தமிழ் என்னும் சொல் உண்டா யிற்று எனச் சிலர் கூறினர். இது தவறுடைய தென்றும் தமிழ் என்பதே திராவிடமாயிற்றென் றும் வேறு சிலர் கூறினர். இச் சொல்லைக்குறித் துப் பலர் ஆராய்ந்து எழுதியுள்ளார்கள். தமிழ் என்னும் சொல்லே ழகரத்தை உச்சரிக்க அறி யாத வடநாட்டாரின் உச்சரிப்பு வேறுபாட்டால் திராவிடம் ஆயிற்று என முடிவு கட்டப்பட்டுள்ளது.

## விந்தியத்துக்குத் தெற்கிலும் மொழி மாறுபடுதல்

கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சைனம் பௌத்தம் என்னும் இருமதங்கள் வடநாட்டில் எழுந்தன. இம் மதக் கொள்கைகள் விரைவில் பரவின. பொது மக்கள் பெரும்பாலும் இம்மதங்களைத் தழுவி இருந்தார்கள். இம்மத நூல்கள் மக்கள் பேசும் மொழிகளில் எழுதப்பட்டன. இது ஒரு புதிய

முறையாகும். மௌரிய சந்திரகுப்தன் அசோகச் சக்கரவர்த்தியின் பாட்டன். இவன் காலத்தில் பெரும் பஞ்சம் ஒன்று உண்டாயிற்று. அக்காலத்தில் சைன முனிவர்கள் பலர் கன்னட, தெலுங்கு நாடுகளிற் சென்று வாழ்ந்தனர். அவர்கள் தென்னாட்டு மொழியைப் பயின்று அம்மொழியில் நூல்கள் செய்தனர். இதனால் பிறமொழிக் கலப்பு உண்டாகியும் அங்கு வழங்கிய தமிழ் உறழ்ந்தும் பிறழ்ந்தும் உச்சரிக்கப்பட்டும் கன்னடம், தெலுங்கு மொழிகளாக மாறுதலடைந்தது. கன்னடம், தெலுங்கு என்னும் இரு மொழிகளுக்கிடையில் அதிக வேறுபாடு இருக்கவில்லை. பிற்காலத்தில் தெலுங்கு சமக்கிருதப் போக்கைப் பெரிதும் தழுவினமையால் அது கன்னடத்துக்கு இனமுடையதோ என்று ஐயுறும்படி மாறுபடுவதாயிற்று. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சயங்கொண்டார் என்னும் புலவர் தமிழ் நாட்டில் விளங்கினார். இவர் கலிங்கத்துப் பரணி என்னும் சிறந்த நூலைச் செய்தார். அந்நூலில்,

> "மழலைக்குறு மொழியிற்சில வடுகும் பல தமிழுங்
> குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்"


எனக் கூறப்பட்டுள்ளது. இதனால் அக்காலத்தில் கருநாடக மொழியில் தமிழ்ச் சொற்கள் பல வழங்கின என அறிகின்றோம்.

மலையாளம் ஒரு காலத்தில் செந்தமிழ் நாடாகவிருந்தது. சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை போன்ற உயர்ந்த செந்தமிழ் இலக்கியங்கள்

சேரநாட்டுப் புலவர்களாற் செய்யப்பட்டவை. கம்பர் காலத்தில் மலையாளம் தோன்றவில்லை. பிற் காலத்தில் நம்பூதிரிகள் என்னும் பிராமண வகுப் பினர் மலையாளத்தில் குடியேறினர்கள். அவர் களின் கூட்டுறவால் அங்கு வழங்கிய தமிழோடு வட சொற்கள் பல கலந்தன. அதனுல் சேரநாட்டுத் தமிழ் மலையாள மொழியாக மாறுபடுவதாயிற்று.

## தமிழ் நூல்கள் குறிப்பிடும் தமிழ் நாட்டெல்லை

தமிழிலிருந்த பழைய நூல்கள் பெரும் பாலும் இறந்து போயின. இன்று கிடைத்துள்ள




நூல்களுள் பழமையுடையது தொல்காப்பியம். இதன் காலம் இற்றைக்கு முன் இரண்டாயிரத்து

மூந்நூறு ஆண்டு வரையில் ஆகலாம். அந்நூலில் தமிழ் வழங்கும் எல்லை குறிப்பிடப் பட்டுள்ளது. வடக்கே திருப்பதி மலை, தெற்கே கன்னியாகுமரி ஆகிய எல்லைகளுக் குட்பட்ட நிலத்தில் அக்காலத்தில் தமிழ் வழங்கிற்று. தொல்காப்பியம் செய்யப்படுகின்ற காலத்தில் தெலுங்கு கன்னடம் முதலிய மொழிகள் தோன்றியிருந்தன. கன்னடமும் தெலுங்கும் தமிழ் நாட்டுக்கு வடக்கே வழங்கும் மொழிகளாதலின் அவை வடுகு எனப்பட்டன. வடுகு என்பதற்கு வடக்கு என்பது பொருள்.

## மொழி தோன்றும் வகை

மொழி திடீர் எனத் தோன்றுவதில்லை. வித்திலிருந்து முளை கிளம்பி முளை மரமாக வளர்வதுபோல மொழியும் சிறிது சிறிதாகவே வளரும். விலங்குகளும் பறவைகளும் மற்றும் உயிர்களும் தத்தம் கருத்துக்களை வெளியிடச் சிற்சில ஒலிக்குறிகளையும் சைகைகளையும் பயன் படுத்துகின்றன. நாய் தனது மகிழ்ச்சியை வாலையாட்டியும் ஒருவகையாகக் குரைத்தும் தெரிவிக்கின்றது. பேட்டுக்கோழி ஆபத்து, ஆபத்தின்மையை வெவ்வேறு ஒலிக்குறிகளால் தன் குஞ்சுகளுக்கு அறிவிக்கின்றது. நாம் கூர்ந்து கவனித்தால் ஒவ்வொரு உயிரும் சில ஒலிக் குறிகளாலோ சைகைகளாலோ பேசுவதை நாம் அறியலாம். ஒருவர் மொழியை ஒருவர் அறியாத இருவர் தனிவழியிடத்தே சந்தித்தால் அவர்கள் எவ்வாறு

பேசுவார்கள்? நாம் ஊமரோடும் செவிடரோடும் எவ்வாறு பேசுகின்றோம்? இவ்வாறே ஆதிகால மனிதன் பேச்சுமிருந்தது. அவன் தன்னைச் சூழ்ந்துள்ள இயற்கைப் பொருள்கள் பறவைகள் விலங்குகளிடத்திலிருந்து எழும் ஓசைகளை உற்றுக் கேட்டான்; அவ்வப் பொருள்களிடத்திருந்து எழுந்த ஒலிக்குறைகளையே அவ்வப் பொருள் களுக்குப் பெயராக இட்டு வழங்கினான். காகா எனக் கரையும் பறவைக்குக் காகம் எனப் பெயரிட்டான்; கூ கூ எனக் கூவும் பட்சியைக் குயிலென அழைத்தான்; மா மா என அழும் விலங்கை மாடு என்றான். இவ்வகையில் தோன் றிய பெயர்களைப் பல மொழிகளில் இன்றும் காணலாம். இவ்வகையிலல்லாது வேறு சில வகை களிலும் தன்னைச் சூழ்ந்துள்ள பொருள்களுக்கு அவன் பெயர்களை இட்டான். அப்பெயர்களின் காரணங்கள் எல்லாவற்றையும் இன்று அறிந்து கொள்ளுதல் கடினமாகும். பின்பு செயல்கள் பண்புகளைக் குறிக்கவும் சொற்கள் வழங்கப் பட்டன. இவ்வாறு தோன்றிய சில ஒலிக்குறி களும் சைகைகளும் ஆதிகால மக்களின் பேச்சாக இருந்து வந்தன. காலந்தோறும் தோன்றிய சொற்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வந்தன. புதிதாக மக்கள் கண்டறியும் பொருள் களையும் செயல்களையும் குறிக்கும் சொற்களும் தோன்றின. இவ்வாறு மொழி சிறிது சிறிதாக நீண்டகாலம் வளர்ச்சியடைவதாயிற்று. இவ்வாறு

மொழி தோன்றி வளர்ச்சி யடைவதற்குப் பல்லாயிர ஆண்டுகளாயின.

### எழுத்து நிலை

மொழி பேச்சு நிலையை அடைந்தபின் எழுத்து நிலையை அடைந்தது. ஆதிகால மக்கள் தமது கருத்துக்களை எழுதிக்காட்ட விரும்பினார்கள். அவர்கள் தமது எண்ணங்களைப் பட வடிவில் எழுதினார்கள். மனிதனைக் குறிக்க மனித வடிவமும், விலங்குகளைக் குறிக்க விலங்குகளின் வடிவங்களும், பறவைகளைக் குறிக்கப் பறவைகளின் வடிவங்களும்எழுதப்பட்டன. செயல்களைக் குறிக்க அச்செயல்களைக் காட்டும் படங்கள் எழுதப்பட்டன. பின்பு ஒரு சொல்லைக் குறிக்க ஒரு குறியீடு அமைத்து வழங்கப்பட்டது. பின்பு மொழியில் உள்ள ஒலிகளை உச்சரித்துப் பார்த்து ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வோர் எழுத்து அமைக்கப்பட்டது. இம் முறையினால் தனிஒலி எழுத்துகளைக் கொண்டு சொற்களையும் சொற்களைக் கொண்டு வசனங்களையும் அமைத்தல் இலகு வாயிற்று. மொழி பேச்சு நிலையிலிருந்து எழுத்து நிலையை அடையும் போது ஒரு திருத்தம் உண்டாகின்றது. அப்பொழுது இலக்கியங்கள் தோன்றுகின்றன. பின் இலக்கணங்கள் தோன்றுகின்றன. இலக்கண அமைவுக்கு உட்படும் மொழி நடை செம்மையான நடை எனப் படுகின்றது. இவ்வாறு மொழி எழுத்து நிலை அடைந்து இலக்கண வரம்பு பெறப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகும்.

சிந்துவெளி நாகரிகத்தின் காலம் முன்பின் ஆறாயிரம் ஆண்டுகளாகும். ஆரியர் வருகைக்கு முன் வடநாடு முழுமையும் பரவி வாழ்ந்த மக்கள் திராவிடர் என்பது முன்னேரிடத்திற் கூறப் பட்டுள்ளது. சிந்து வெளிகளில் வாழ்ந்த மக்கள் எழுத்துக்களைப் பயன்படுத்தினர்கள். அவ்வெழுத் துக்களினின்றும் வட பிராமி, தென்பிராமி என்னும் எழுத்துக்கள் பிறந்தன. இவ்வெழுத்துக்களி னின்று வடநாடு தென்னடுகளில் வழங்கும் எழுத்துக்கள் எல்லாம் தோன்றின.

பிராமி எழுத்துக்கும், மத்திய தரைக்கடலின் கிழக்கு ஓரங்களில் வாழ்ந்த பினீசியர் என்னும் பழைய மக்களின் எழுத்துக்கும் உறவு உண்டு. பினீசிய மக்கள் பண்டை நாளில் பெருங்கட லோடிகளாயிருந்தனர். இவர்கள் தமது எழுத்தை இந்தியாவினின்றும் பெற்றார்கள். பினீசியரிட மிருந்து, கிரேக்கரும், கிரேக்கரிடமிருந்து உரோம ரும், உரோமரிடமிருந்து மற்றைய ஐரோப்பிய சாதியினரும் எழுத்தெழுதும் முறையைக் கற்றுக் கொண்டார்கள்.

## முத்தமிழ்

தமிழ், இயல் இசை நாடகம் என்னும் மூன்று கூறுபாடுகளை உடையது. இம் மூன்று கூறு பாடு களும் தன் வளர்ச்சிக் காலத்தில் தமிழ் அடைந் திருந்த மூன்று நிலைகளாகும். மக்களின் உணர்ச்சிக் கேற்ப உடலில் சில அசைவுகளும் வேறுபாடு களும் உண்டாகின்றன. இவ்வசைவுகளையும்

உடல் வேறுபாடுகளையும் குறிக்கொண்டு முற்கால மக்கள் தமது கருத்துக்களை நடித்துக் காட்டி வந்தார்கள். முற்கால மக்கள் தாம் செய்யப் புகும் ஒவ்வொரு செயலையும் முன்னதாகவே ஆடிக் காட்டினார்கள். இன்று கோவில்களில் ஒலிக்கப் படும் வாத்தியங்கள் முன் ஆட்டங்களோடு பயன் படுத்தப்பட்டன. காலத்தில் ஆட்டம் நின்று போக வாத்தியங்கள் ஒலிக்கப்படுகின்றன.

மொழி தோன்றி வளர்ச்சியுறாத ஒருகாலத்திய மக்கள் தமது எண்ணங்களை உடல் நிலை பார்வை, சாடைகளால் விளக்கினார்கள் என ஓரிடத்திற் கூறினோம். உணர்ச்சி உடம்பில் வெளிப்பட்டு நிற் கும்படி நடித்துக் காட்டுதல் அபிநயம் எனப்படும். அபிநயமே நடிப்புக்கு முக்கியம். இன்று சதிர்என வழங்கும் ஆட்டம் ஒரு கருத்தை உடல் நிலை களாலும் சாடைகளாலும் நடித்துக் காட்டுதலே யாகும். இதனை ஊமைக் கூத்து எனினும் பொருந் தும். நடிக்கப்படும் பாட்டை ஒருவர் பக்கத்தில் நின்று பாட அல்லது நடிப்பவர் தாமே பாட்டைப் பாடிக் கொண்டு நடித்தலாகிய முறை பின்பு தோன்றிற்று. பாடி ஆடுதற்கு அமைந்த பாடல் களும், நடிப்பு விதிகளைக் கூறுவனவுமாகிய நூல் கள் நாடகத் தமிழில் அடங்கும். ஒரு கதையை நடித்துக் காட்டலாகிய நாடகம் நடிப்பின் பின் எழுந்தது. நடித்தற்கன்றி, மக்கள் உள்ளத்தில் கோபம், வீரம், சோகம் மகிழ்ச்சி போன்ற உணர்ச்சிகளை எழுப்புதற் கேற்ற பாடல் வகை

களும் நடைபெற்றன. இப்பாடல்கள் இசைக்கருவிகளின் துணை கொண்டு பாடப்பட்டன. இவ்வகைப் பாடல்களைப் பற்றிய இயல்புகளைக் கூறும் நூல்களும் இசைத் தமிழின்பாற் படும்.

"முற்கால இசைப் பாட்டுக்கள் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப்படுவன உருவில் அடங்கும். பலவகையான கூத்துக்களிலும் வரிப்பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சிந்து, ஆண்டி, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள்வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்துவகைகளும் அவற்றிற்குரிய பாடல்களும் பயிற்சியில் இருந்தன. இவை பெரிதும் மகளிருடைய விளையாட்டுக்களாக விளங்கின. மற்றும் மகளிர் கிளியோட்டுவதும் பாட்டு, சாந்தியடிப்பதும் பாட்டு, களை பறிப்பதும் பாட்டு, இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக்களோடு நிகழ்ந்தன."

முற்காலத்தில் நூல்கள் வசன நடையில் எழுதப்படவில்லை; செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டன. அச்செய்யுட்கள் அவைகளின் வகைக்கேற்ற ஓசைகளில் படிக்கப்பட்டனவாயினும், அவை இசைக்கருவிகளின் துணையோடு பாடப்படும் இசைப்பாடல்கள் போன்றனவல்ல. இவ்வகை நூல்களும், தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் கற்பிக்கும் இலக்கண நூல்களும் இயற்றமிழின்பாற் படுவன.

## தமிழ்ச் சங்கம்

தமிழ்ச் சங்கம் என்றால் என்ன? தமிழ்ப் புலவர்களின் கூட்டமே. இவ்வுலகில் ஆங்காங்குச் சீர்திருத்தம் பெற்று வாழ்ந்த பழைய மக்கள் எல்லோரும் நூல் நிலையங்கள் அமைத்தும் புலவர்களைக் கூட்டியும் தம் மொழிகளை வளர்த்தார்கள். அவ்வாறே தமிழ் அரசரும் தமிழ் மொழியை வளர்த்தார்கள். தமிழ் அரசருள் பாண்டியரால் கூட்டப்பட்ட புலவர் சபையின் வரலாறே சங்க வரலாறாகும். இச் சங்க வரலாறு செவி வழக்கில் நீண்டகாலம் தொடர்ந்து வந்தது. அது பிற்காலத்தில் ஏட்டில் எழுதிவைக்கப்பட்டது. நீண்ட காலம் செவிவழக்கில் வந்த இவ்வரலாற்றில் பல கற்பனைகளும் இடம் பெற்றுள்ளன. அவ்வரலாற்றைக் கொண்டு மிக மிக முற்காலம் முதல் தமிழ் நாட்டில் பெரிய நூலகமும் தமிழ்ப் புலவர் கூட்டமும் இருந்து வந்தன என்பதை நாம் தெள்ளிதில் அறிந்து கொள்ளுதல் கூடும்.

## முதற்சங்கம்

முற்காலத்தில் பாண்டிய நாடு கன்னியா குமரிக்குத் தெற்கிலும் விரிந்து கிடந்தது. அப்பகுதி ஒரு காலத்தில் கடலுள் மறைந்து போயிற்று. கடலுள் மறைந்து போன நாட்டில் பாண்டியர் தலைநகரம் இருந்தது. அந்நகரம் மதுரை எனப் பெயர் பெற்று விளங்கிற்று. முதற் சங்கம் இம் மதுரை நகரிற் கூட்டப்பட்டது. தமிழ்

நாட்டின் பல பாகங்களில் விளங்கிய புலவர்கள் அதன் உறுப்பினர்களாக விருந்தார்கள். சங்கம் நீண்டகாலம் நடைபெற்றபின் பாண்டியர் தலை நகரைக் கடல் கொண்டது. அப்போது சங்கம் குலைந்தது. சங்க நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த நூல்களும் அழிந்தன.

### இரண்டாஞ் சங்கம்

பின்பு பாண்டிய அரசர் பொருநை ஆற்று முகத்துவாரத்தில் தமது தலைநகரை அமைத் தார்கள். அந்நகர் கவாடபுரம் எனப்பட்டது. பாண்டிய அரசர் மறுபடியும் தமிழ்ச் சங்கத்தை அங்குக் கூட்டினார்கள். வான்மீகி இராமாயணம் கவாடபுரத்தைப் பற்றிக் கூறுகின்றது. கவாட புரமும் கடலால் அழிக்கப்பட்டது. அப்பொழுது பாண்டியர் மணலூர் என்னுமிடத்தில் தமது நகரை அமைத்தார்கள். பாண்டியர் தலை நகரம் மண லூரில் இருந்தமையை மாபாரதம் கூறுகின்றது.

### மூன்றாஞ் சங்கம்

பின்பு பாண்டியர் திருப்பரங்குன்றத்துக்கு நேர் தெற்கிலே தமது தலைநகரை அமைத்து அதற்கு மதுரை எனப் பெயரிட்டனர். அங்கு, பாண்டியர் புலவர்களைக் கூட்டித் தமிழை வளர்த் தார்கள். புலவர் கூட்டம் இருந்தமையால் மதுரைக்குக் கூடல் என்னும் பெயரும் வழங் கிற்று. இச்சங்கம் கிறிஸ்துவுக்குப் பின் இரண் டாம் நூற்றாண்டளவிற் குலைந்து போயிற்று.

மூன்றாவது தமிழ்ச் சங்க நூல்நிலையத்திலிருந்த பாடல்களின் தொகுப்பே எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பன. யாப்பருங்கல விருத்தியுரை, தொல்காப்பிய உரை, சிலப்பதிகார உரை முதலிய பழைய உரைகளில் இன்று கிடைக்காத பல அரிய நூல்களின் பெயர்களைக் காண்கின்றோம்.


## செந்தமிழ்

செந்தமிழ் என்பதற்குத் திருத்தமான தமிழ், அல்லது திருத்தஞ் செய்யப்பட்ட தமிழ் என்பது பொருள். மதுரையும் அதன் சூழலும் தமிழ் வழக்குக்கு மத்திய இடங்களாகக் கொள்ளப் பட்டன. பழைய இலக்கண நூல்களில் "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம்" எனக் குறிக்கப்பட் டுள்ளது. செந்தமிழ்நாடு ஒன்று அதனைச் சூழ்ந்து பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளி ருந்தன எனப் பிற்காலத்தார் மயங்கிக் கூறினர். வடக்கே வேங்கடமும், தெற்கே குமரியும், கிழக்கும் மேற்கும் கடலுமாகிய எல்லைகளுக்குட்பட்ட நிலத் தில் தமிழ் வழங்கியதென முன்னோரிடத்திற் கூறி யுள்ளோம். தெய்வச்சிலையார் என்னும் உரை யாசிரியர் தொல்காப்பிய உரையில் குறிப்பிட்டி ருப்பது பின்வருமாறு:

"வட வேங்கட ந் தென்குமரி
ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி"

என்றமையாலும் இதனுள் தமிழ்கூறு நல்லுலக

மென விசேடித்தமையாலும், கிழக்கும் மேற்கும் எல்லை கூறாது தெற்கெல்லை கூறியதனாற் குமரி யின் தெற்காகிய நாடுகளை ஒழித்து வேங்கட மலையின் தெற்கும், குமரியின் வடக்கும் குண




செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்

கடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நில மென்றுரைப்ப.

## திசைச்சொல்

செந்தமிழ் வழக்குக்கு மத்திய இடமாயிருந்த மதுரையையும் அதன் சூழலையு மொழிந்த பிற தமிழ் வழங்கும் நாட்டு எல்லைகளுள் மாத்திரம் வழங்கும் சிற்சில சொற்கள் திசைச் சொற்கள் எனப் பட்டன. திசைச் சொற்கள் எனப்பட்டவை தமிழ் நாட்டில் வழங்கிய சொற்களே. உரையாசிரியர்கள் திசைச் சொல்லுக்கு உதாரணமாகக் காட்டியுள்ள சொற்கள் தமிழ் நாட்டில் வழங்கிய சொற்களே. தமிழ் நாடொழிந்த பிற நாட்டு மொழிகளினின்றும் வந்து தமிழில் வழங்கும் சொற்களே திசைச் சொற்கள் எனப் பிற்காலத் தார் கொண்டனர். இக்கருத்துத் தவறு உடையதாகும்.

## வடசொல்

ஒரு காலத்தில் தமிழில் பிறமொழிச் சொற்கள் கலக்கவில்லை. வடநாட்டவர்களின் கூட்டுறவு உண்டான காலத்தில் வடசொற்கள் சில அருகித் தமிழில் வழங்கின. சங்க நூல்களில் வடசொல் என்று சந்தேகித்தற்குரிய சில சொற்கள் காணப் படுகின்றன. அவை இரு மொழிகளுக்கும் பொது வாயுள்ள சொற்களாகலாம் என்றும் சிலர் கருதியுள்ளார்கள். வடசொற்களின் உச்சரிப்புக்கும் தமிழ்ச் சொற்களின் உச்சரிப்புக்கும் வேறுபாடு உண்டு. வடசொற்கள் தமிழில் கலக்கும் இன்றியமையாமை நேர்ந்தால் அச்சொற்கள் எப்படிக்

கையாளப் படுதல்வேண்டுமென்பதைப் பற்றிப் பழைய இலக்கண நூலாசிரியர்கள் கூறியிருக்கின்றனர். வடசொற்களை வடஎழுத்து உச்சரிப்பு இன்றித் தமிழ் உச்சரிப்பு முறையாக மாற்றித் தமிழில் வழங்க வேண்டுமெனத் தொல்காப்பியங் கூறுகின்றது. பிறமொழிச் சொற்களைத் தத்தம் மொழிகளில் இயல்புக்கேற்பத் திரித்துத் தம்மொழிகளில் வழங்குவதே பண்டுமுதல் மக்கள் கையாளும் முறையாகும். ஆங்கிலத்தில் சென்று வழங்கும் பிற மொழிச் சொற்களெல்லாம் ஆங்கில மொழி ஒலி முறைக்கேற்பத் திரித்து வழங்கப்பட்டிருத்தலை நாம் காணலாம். இம்முறை இன்று தமிழிற் கையாளப் படாமை இழுக்காகும்.

## மொழிகளில் புதிய புதிய ஒலிகள் காணப் படுதற்குக் காரணம்

மக்களின் ஓசை அவர்கள் வாழும் இடங்களின் வெப்ப நிலைக்கேற்ப மாறுபடுகின்றது. வெப்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் தட்ப நாடுகளில் வாழும் மக்களின் ஓசைக்கும் வேறுபாடு காணலாம். மக்களின் ஓசை மாத்திரமன்று பறவை விலங்குகளின் ஓசையும் மாறுபடுதலுண்டு. இப்பூமியின் நடுக்கோட்டினின்று கீழ் நோக்கி அல்லதுமேல் நோக்கிச் சென்றால் செல்லுந் தோறும் படிப்படியே வெப்பம் குறைகின்றது. அவ்விடங்களில் வாழும் மக்களின் ஓசைகளும் சிறிது சிறிதாக மாறுபடுகின்றன. இக்

காரணத்தினாலேயே சிற்சில மொழிகளில் சிறப்பாகச் சிற்சில ஒலிகள் காணப்படுகின்றன. ஒரு மொழியில் காணப்படும் சிறப்பொலிகள் இன்னொரு மொழியிற் காணப்படாவிடின் அது அம்மொழியின் குறைபாடு எனக் கருதுதல் ஆகாது. வெவ்வேறு மொழிகளை வழங்கும் மக்கள் ஒருவரோடு ஒருவர் கலக்கும்போது ஒருவர் மொழிச் சொற்கள் மற்றவர் மொழியில் கலக்க நேர்கின்றன. அப்பொழுது அவர்கள் புதிய எழுத்தொலிகளுடைய சொற்களை உச்சரிக்க மாட்டாதவராகின்றனர். அப்புதிய உச்சரிப்புள்ள சொற்களை ஒரு மொழியில் சேர்த்து வழங்குதல் அம்மொழியின் இயல்புக்கு ஏலாததாகவும் இனிமையில்லாததாகவும் தோன்றும். அதுபற்றியே பிற மொழிச் சொற்களை ஆளுமிடத்து அவை ஆளும் மொழியின் இயல்புக்கேற்பத் திரித்து வழங்கப்படுதல் வேண்டுமென்னும் விதிகள் உண்டாயின.

## சமக்கிருதம்

சமக்கிருதம் என்பதற்கு நன்றாகச் செய்யப்பட்ட மொழி என்பது பொருள். சமக்கிருதம் என்பது செந்தமிழ் என்பது போன்ற வழக்கு. வடநாடுகளில் மக்கள் பேசும் மொழிகள் பலவாய் இருந்தபோதும் இலக்கிய மொழி சமக்கிருதமாக விருந்தது. பௌத்த சைன மதங்கள் வீழ்ச்சியுற்றுப் புது முறையான இந்து மதம் தெற்கே தலையெடுத்த காலத்தில் தென்னாட்டிலும் சமக்கிருதம் வித்துவான்களின் இலக்கிய மொழி

யாகவும், சமய மொழியாகவும் இருந்து வந்தது. இன்றும் அது சமய மொழியாகக் கொள்ளப் பட்டு வருகின்றது. இந்து மதம் இந்தியாவி னின்றும் கம்போதியா, சுமாத்திரா, யாவா, பாலி முதலிய பிற நாடுகளிற் சென்று பரவியபோது சமய மொழியாகிய சமக்கிருதமும் உடன் சென் றது. இதனால் பற்பல மொழிகளில் சமக்கிருதச் சொற்கள் சென்று கலந்துள்ளன. சமக்கிருத மொழியில் திராவிடம், கொண்டு முதலிய இந்திய மொழிச் சொற்களும் சென்று கலந்துள்ளன. அவை சமக்கிருத மொழியின் இயைபுக்கு ஏற்பப் புதிய வடிவோடு காணப்படுகின்றன.

## சங்க நூல்கள்

மதுரையில் நடந்த சங்கம் தமிழ்க் கல்வி சம்பந்தமானவைகளை மாத்திரம் கவனித்து வந்தது. ஆகவே, அங்கு இலக்கண இலக்கிய சம்பந்தமான ஆராய்ச்சிகளே நடைபெற்று வந்தன. நகரங்களில் பட்டி மன்றங்கள் என்னும் விரிவுரை நிகழ்த்தும் சாலைகளும் இருந்தன. அங்கு வித்துவான்கள் சமயம், தர்க்கம் போன்ற பல துறைகளில் விரிவுரைகளும் வாதங்களும் நடத் தினர். எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பன சங்கநூல்கள் என வழங்குகின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும் சங்கநூல்கள் என வழங்குகின்றன. இந்நூல்களிற் பெரும்பாலன பிற்காலத்துச் செய்யப்பட்டவை. ஆகவே, பதி

னெண் கணக்கு நூல்களில் ஒன்றிரண்டைத் தவிர மற்றவைகளைச் சங்க நூல் வரிசைகளில் சேர்த்தல் இயலாததாகின்றது. எட்டுத் தொகை பத்துப் பாட்டு என்பன தமிழ்ச் சங்க நூலகத்தில் பாது காத்து வைக்கப்பட்டிருந்த பாடல்களின் தொகுப்பு என முன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். எட்டுத் தொகை நூல்களாவன: அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து என்பவை. பத்துப் பாட்டில் அடங்கியவை: முருகாற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும் பாணாற்றுப் படை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, மலைபடுகடாம், பட்டினப் பாலை, மதுரைக் காஞ்சி நெடுநல்வாடை, பொருநராற்றுப் படை என்பன. இவை தமிழ் நாட்டில் ஆங்காங்கிருந்த பற்பல புலவர்களால் செய்யப்பட்டவை. சங்கநூற் பாடல்களைச்செய்த புலவர்கள் ஐஞ்ஞூற்றுக்கு மேற்பட்டவராவர். இப்பாடல்கள் அரசரால் பெரும் புலவர்களைக் கொண்டு தொகுப்பிக்கப் பட்டவை.

## அகம்

அகநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு முதலிய நூல்கள் கூறும் பொருள் அகப்பொருள் சம்பந்தமானது. அகம் என்பது கணவன் மனைவியரிடையே நிகழும் அன்பொழுக்கம். இவ்வுலகிலே உண்மை அன்புடைய கணவன் மனைவியரிடையே நிகழக் கூடிய அன்பொழுக்கங்களை நிகழ்ந்தனவாக வைத்து

அழகு பெற அகப்பொருட் பாடல்கள் கூறு கின்றன. அகப் பொருள் நூல்களால் பழங்காலத் தில் தமிழரின் பண்பட்ட இல்லற வாழ்க்கை எவ்வாறிருந்தது, அவர்களின் சீர்திருத்த முறைகள் எவ்வாறிருந்தன என்பன போன்ற பல அரிய செய்திகளை நாம் நன்கு அறிகின்ருேம்.

## புறம்

புறநானூறு, பதிற்றுப்பத்து முதலிய நூல் களில் கூறப்படும் பொருள் புறம். புறப் பொருட் பாடல்கள் அரசரின் வெற்றி, கொடை, வீரம் முதலியவைகளைப் புகழ்ந்து பாடப்பட்டவை. புலவர் களின் திறமைக் கேற்ப அரசர் அவர்க்குப் பொருள் வழங்கினுர்கள். புறப்பொருட் பாடல்கள் அக்கால அரசரின் வீரம், கொடை, ஞாயம், ஆட்சி முறை முதலியவைகளைத் தெரிவிக்கின்றன. புறப் பொருட்பாடல்களுள் ஒன்றின் பொருளை இங்குத் தருகின்றேம்.

" வளையல் அணிந்த கையுடைய மகளிர் அவலிடிப்பார்கள். அவர்கள் உலக்கையை வாழை மீது சார்த்திவைத்து விட்டு வள்ளைக் கொடியைக் கொய்வார்கள். கதிர்க்கனத்தால் நெல்வளைந்து நிற்கும். இவ்வாறு செழிப்புடைய வயலிடத்து நீண்டகாலுடைய நாரை பரந்திருக்கும். இந் நாரைகளும், மீன்களை உண்ணும்படி மரங் களில் இருக்கும் கூட்டமாகிய கொக்கு களும் வெருண்டு ஓடும்படி வெள்ளிய வளை

அணிந்த கையுடைய மகளிர் கைகளை அசைத்து அவைகளை ஓட்டுவர். நாட்டிலே இடையறாது விழாக்கள் நிகழும். யாழில் வார்க்கட்டைத் தளர்த்தாத கூத்தர் சாவடிகளில் சென்று பண்ணமைத்துப் பாடுவர். இவ்வாறு செல்வமும் செழிப்பும் மிகுந்த செல்வமுடைய நாடுகளைப் பல் யானைகளையுடைய குட்டுவன் வெற்றி கொண்டான். அவனுடைய படைகள் பரந்து சென்றமையால் அந்நாடுகள் அழகு கெட்டன.''[1]

அகப் பொருள் புறப் பொருள் பற்றிப் பாடும் மரபு மிகப் பழங்காலம் முதல் இருந்து வருகின்றது. இவ்வகைப் பாடல்கள் செய்வதற்கு இலக்கணம் தொல்காப்பியத்திற் கூறப்படுகின்றது. தொல்காப்பியம் அதற்குமுன் இருந்த பல இலக்கணங்களைப் பின்பற்றிச் செய்யப்பட்டது. புறநானூற்றுப் பாடல் ஒன்று பாண்டவருள் ஒருவராகிய தருமன் மீது பாடப்பட்டுள்ளது.

பத்துப் பாட்டிலடங்கிய பாடல்களும் அரசரைப் புகழ்ந்து பாடப் பட்டவைகளே. இப்பாடல்கள் மக்களின் வாழ்க்கை, இயற்கை முதலியவைகளை நன்கு சித்திரித்துக் காட்டுகின்றன. பத்துப் பாட்டில் ஆற்றுப் படை என்னும் தலைப்பின் கீழ்ச் சில பாடல்கள் வந்துள்ளன. இவை அரசனை நேரில் புகழாமல், அவனைப் பாடிப் பொருள் பெற்று மீள்கின்ற ஒருவன், வறுமையா

1. பதிற்றுப் பத்து பாடல்—29.

லலைந்து திரியும் இன்னொருவனைப் பார்த்துத் தன்னை வரவேற்றுப் பொருள் நல்கிய அரசனின் புகழை அவனுக்கு எடுத்துச் சொல்வது போலமைந்துள்ளன. இப்பாடல்கள் படிப்பதற்கு மிக மிகச் சுவை அளிப்பன. சங்க நூல்களைக் கற்பதால் அக்காலத் தமிழரின் பண்பாடு, வீரம், கொடை, சமயக் கொள்கை, மணமுறை, பழக்க வழக்கங்கள் போன்ற பல செய்திகளை நாம் நன்கு அறிகின்றோம். சங்க கால நூல்கள் பிற்கால நூல்களைப் போலச் சமயத்தையே குறிக்கோளாகக் கொண்டு செய்யப்பட்டன வல்ல.

## தமிழில் வடசொற் கலத்தற்குரிய காரணம்

தமிழ் நாட்டில் பௌத்த சைன மதக் கொள்கைகள் பரவின. தமிழ் மக்கள் பலர் அம்மதங்களைத் தழுவினர். பௌத்த சைன நூல்கள் பாலி, சமக்கிருதம் முதலிய மொழிகளில் எழுதப் பட்டிருந்தன. அம்மொழிகளில் எழுதப்பட்டிருந்த நூல்களைப் பயில்வதற்குப் பலர் அம்மொழிகளைப் பயின்றனர். இன்னொரு சாரார் அம்மதக் கொள்கைகளை எதிர்த்து நின்றனர். அம்மதக் கொள்கைகளைக் கற்று எதிர் வாதம் புரியும் பொருட்டும் பலர் வட மொழியைப் பயின்றனர். இவை போன்ற காரணங்களால் வடமொழி பண்டிதர்களறிந்த மொழியாக விருந்தது. இன்று பேச்சு வழக்கில் தமிழோடு ஆங்கிலம் எவ்வாறு கலந்து நிற்கின்றதோ அதேபோல வடமொழிச் சொற்களும்


தமிழிற் கலப்பவாயின. தமிழிற் கலந்துள்ள வட சொற்கள் பெரும்பாலும் சமயத் தொடர்பானவையே. சங்ககாலத்தில் வடசொற்கள் தமிழில் அருகி வழங்கின. அச் சொற்கள் வடமொழிக் குரியனவோ என்னும் ஐயத்துக் கிடமானவை.

## மணிப்பிரவாளம்

தமிழோடு வடமொழி மிகக்கலந்து வழங்கத் தலைப்பட்ட ஒரு காலத்தில் மணிப்பிரவாளம் என்னும் புதிய நடை ஒன்று தமிழில் வழங்குவ தாயிற்று. மணிப்பிரவாள மென்பது சரிக்குச்சரி தமிழும் சமக்கிருதமுங் கலந்தநடை. இந்நடை சைனராலும் வைணவராலும் பெரிதும் பயன் படுத்தப்பட்டது. மணிப்பிரவாள நடைக்கு எடுத் துக் காட்டு பின்வருமாறு:

"கந்யகா யோக்கியனாகிய பர்த்தா ஸஹஸ்ர கூட ஜின பவனத்தை யடைதலும் சம்பக விகாச மும் கோகில கோலாஹலமும் தடாக பூர்ணமும் தக்கதகுமுதவிகாசமும் மதுரசஞ்சாரமும் கோபுரக வாட விகடனமுமாகிய அதிசயங்களுள்ள வாகு மென்று ஆதேசித்தனர்."

பன்னிரண்டாம் நூற்றாண்டிற் செய்யப்பட்ட வீரசோழியத்தில் மணிப்பிரவாள நடையில் செய்யுள் செய்வதற்கு விதி காணப்படுகின்றது. தமிழ் உலகு மணிப்பிரவாள நடையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே, அந்நடை நாளடைவில் நின்று போயிற்று. மணிப்பிரவாள நடை மலை




இந்திய நாட்டில் வழங்கும் முக்கிய மொழிகள்

யாள நாட்டில் கைக்கொள்ளப் பட்டமையினலேயே அங்கு வழங்கிய தமிழ் கெட்டு மலையாளம் மாயிற்று என ஆராய்ச்சி அறிஞர் கூறுகின்றனர்.

## பிற்கால நூல்களின் இலக்கு

சங்க காலத்திற்குப் பின் தென்னுட்டில் மதக் குழப்பங்கள் உண்டாயிருந்தன. அக்காலத்திற்

ரேன்றிய இலக்கியங்கள் சமயக் கொள்கைகளைப் பரப்பும் பொருட்டு எழுந்தன. பிற்காலத்தில் நூல் இயற்றியவர்கள் பெரும்பாலும் பௌத்த, சைனர்களே யாவர்.

## சமயப் பாடல்கள்

கி. பி. ஆறும் ஏழாம் நூற்றாண்டுகளில் பௌத்த சைன மதங்களை நசித்துத் தென்னாட்டு மதம் தலை எடுத்தது. தென்னாட்டு மதமென்பது சிவன், திருமால் வழிபாடுகள். அக்காலத்தில் இவ்விரு மதங்களும் தனித்தனியே இரண்டாகப் பிரிந்து வளர்ச்சியுற வில்லை. தென்னாட்டவரின் இவ் வழிபாட்டு முறைகளோடு வடநாட்டவர் மதக் கொள்கைகளும் கலந்தன. அதனால் சமய மொழி சமக்கிருதமாயிற்று. வடநாட்டிற் போலவே தென்னாட்டிலும் சமக்கிருதம் தெய்வ மொழியாகக் கொள்ளப்பட்டது. அக்காலத்தில் சமய நூல்கள் வடமொழியில் எழுதப்பட்டன. கோயிற் பெயர்கள் கடவுட் பெயர்களிலும் சில மாற்றங்கள் உண்டாயின. அக்காலத்தில் சைவ சமயாசாரியர்களும், வைணவ ஆழ்வார்களும் தோன்றித் தமிழில் பல செந்தமிழ்த் துதிப் பாடல்கள் செய்தார்கள்.

இவர்களைக் கண்டு சைன, பௌத்த மதத்தினர் வாளா இருக்கவில்லை. அவர்களும் கதை வடிவில் பல இலக்கியங்களைச் செய்தார்கள். தமிழில் ஐம்பெருங் காப்பியங்கள் என்று சொல்லப் படும் சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை,

வளையாபதி, குண்டலகேசி என்னும் நூல்களைச் செய்தோர் பௌத்த, சைனர்களே யாவர். மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் மூன்றையும் பௌத்தரும், சிலப்பதிகாரம், சிந்தாமணி என்னும் இரண்டையும் சைனரும் இயற்றினர்.

ஐஞ்சிறு காப்பியங்கள் எனப்படும் யசோதர காவியம், உதயணன் கதை, நாககுமார காவியம், நீலகேசி, சூளாமணி முதலியனவும், நாலடியார், பழமொழி, நேமிநாதம், காரிகை, சூடாமணி நிகண்டு, வீர சோழியம், நன்னூல் முதலியனவும் சைன பௌத்தப் புலவர்களாற் செய்யப்பட்டவை. திவாகரம், பிங்கலந்தை முதலிய நிகண்டுகளைச் சைவப் புலவர்கள் செய்தனர்.

## மொழிபெயர்ப்பு நூல்கள்

சைவ வைணவ ஆசாரியர்களுக்குப் பின் நூல்கள் பல வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. பெருந்தேவனார் வடமொழி மாபாரதத்தை வெண்பாவிற் பாடினார். கம்பரும் ஒட்டக்கூத்தரும் இராமாயணத்தைத் தமிழில் இயற்றினர். பரஞ்சோதி முனிவர், நம்பி என்போர் ஆலாசிய மான்மியத்தைத் திருவிளையாடற் புராணம் என்னும் பெயராற் றமிழிற் செய்தனர். நம்பியாண்டார் நம்பி (கி. பி. 1025) அங்குமிங்கும் சிதறிக் கிடந்த தேவாரப்பாடல்களை ஒருங்கு சேர்த்துத் தொகுத்தார். நாதமுனி (கி. பி. 1025) வைணவ ஆழ்வார்களின் பாடல்களாகிய நாலா

யிரப் பிரபந்தத்தைத் தொகுத்தார். சேக்கிழார் (கி. பி. 1135) பெரிய புராணத்தைப் பாடியருளினூர். பின்பு சந்தான குரவர்கள் எனப்படும் மெய்கண்டார், அருணந்திசிவாச்சாரியார், உமாபதிசிவம், மறைஞான சம்பந்தர் முதலிய ஆசாரியர் பலர் தோன்றிச் சித்தாந்த சாத்திரங்களைச் செய்தனர்.

## உரை ஆசிரியர்கள்

இக்காலத்திலேயே நச்சினூர்க்கினியர், பேராசிரியர், இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர் முதலிய புகழ்பெற்ற உரையாசிரியர்கள் தோன்றியிருந்தார்கள். பேராசிரியர், திருக்கோவையார், தொல்காப்பியப் பொருளதிகாரம் முதலிய நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். நச்சினூர்க்கினியர் தொல்காப்பியம், சிந்தாமணி, கலித்தொகை பத்துப் பாட்டு முதலிய கடிய நூல்களுக்கு உரை விரித்துள்ளார்கள். இளம் பூரணர் தொல்காப்பியத்துக்கும், பரிமேலழகர், திருக்குறள் பரிபாடல் என்னும் நூல்களுக்கும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்துக்கும் உரை எழுதியுள்ளனர். இதன் பின் சைவ வைணவ மதப் போராட்டங்கள் நிகழ்ந்தன. அக்காலத்தில் புற்றீசல் போலத் தல புராணங்கள் பல எழுந்தன.

## வசன நடை

முற்காலத்தில் நூல்கள் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. இந்நூல்கள் சிலவற்றுக்குப்

பிற்கால உரை ஆசிரியர்கள் உரை எழுதியிருக்கிருர்கள். இவ்வுரைகளைத் தவிர முற்காலத்தில் வசன நடையில் செய்யப்பட்ட நூல்கள் காணப்படவில்லை. முற்காலத்தில் வசனமும் செய்யுளும் கலந்த நூல்கள் இருந்தன வென்று தொல்காப்பியமென்னும் பழைய இலக்கணத்தால் அறிய வருகின்றது.[1] அவ்வாறு அமைந்த பாடல்கள் உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் எனப்பட்டன. முற்காலத்தில் இவ்வாறு செய்யப் பட்டிருந்த நூல்கள் இறந்து போயின. சிலப்பதிகாரத்தின் இடையிடையே சில உரைப்பகுதிகள் வந்துள்ளன. அவற்றுள் ஒன்று வருமாறு.

"குடத்துப் பாலுறையாமையும் குவியிமிலேற்றின் மடக்கண்ணீர் சோர்தலு முறியில் வெண்ணெயுருகாமையு மறிமுடங் கிடாமையு மான் மணி நிலத்தற்று வீழ்தலும் வருவதோர் துன்பமுண்டெண மகளை நோக்கி மன மயங்காதே மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியுந்தான் காணவாயர் பாடியிலெரு மன்றத்து மாயவனுடன்றன் முனடிய பால சரிதை நாடகங்களில் வேனெடுங்கட் பிஞ்ஞையோடாடிய குரவை யாடுதும்யா மென்ருள் கறவை கன்று துயர் நீங்குக வெனவே." சிலப்பதிகாரம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டிற் செய்யப் பட்ட நூல். கி. பி. ஏழாம் நூற்றுண்டில் எழுதப் பட்ட இறையனர் களவியலுரையின் ஓர் பகுதியை

1. தொன்மை தானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே - தொல் - செய்—238-

ஈண்டு தருகின்றோம். அது அக்கால உரை நடை எவ்வாறிருந்த தென்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

"இவ்வூர் உம்பூரிகுடி கிழார் மகனார் உருத்திர சன்மனென்பான், பைங்கண்ணல், புன்மயிரன் ஐயாட்டைப் பிராயத்தான், ஒரு மூங்கைப் பிள்ளை யுளன்; அவனை அன்னனென்றி கழாது கொடு போந்து ஆசன மேலிரீக் கீழிருந்து சூத்திரப் பொருளுரைத்தாற் கண்ணீர் வார்ந்து மெய்ம்மயிர் சிலிர்க்கும் மெய்யாயின உரை கேட்ட விடத்து."

## உரையாசிரியர்கள் காலத்து வசனநடை : நச்சினார்க் கினியரின் நடை

உரையாசிரியர்கள் காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டுக்கும் 14-ம் நூற்றாண்டுக்கும் இடையிலாகும்.

"பாண்டியன் மாகீர்த்தி யிருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலினவனு மவனவையி லுள்ளோரு மறிவுமிக் கிருத்தலினவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கு விடை கூறினர். அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி நீர் தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க வென்று கூறுதலானுந் தொல்காப்பியனாரும் பல்காலுஞ் சென்று யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டுமென்று கூறுதலானு மவ்விருவரும் வெகுளாமலிந் நூற்குக் குற்றங் கூறிவிடுவ லெனக் கருதியவர் கூறிய கடாவிற் கெல்லாம் விடை கூறுதலினரிறப வென்றார்."

## அடியார்க்கு நல்லார் நடை

"இனி, இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங் குருகும் பிறவும் தேவ விருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாயுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றிய மென்பன வற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணை அல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையும் இறந்தன போலும்."

## பரிமேலழகர் நடை

"இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்த மிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்தற்கு உரிய மாந்தர்க்கு உறுதி யென உயர்ந் தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு; அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத் தாதலின், துறவறமாகிய காரண வகை யாற் கூறப்படுவதல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே."

## உரைநடை வரலாறு

முற்காலத்தில் உரை நடை அறியப்பட்டிருந்த தாயினும் உரைநடையில் நூல் எழுதும் வழக்கு இருக்கவில்லை. அக்கால வசனநடை அடி வரையறையில்லாத ஒருவகைச் செய்யுள் போலவே

கருதப்பட்டது. உண்மையான வசனநடை ஐரோப்பிய பாதிரிமாரின் வருகையோடு ஆரம்பிக்கின்றன. ஐரோப்பியப் பாதிரிமார் 17-ம் நூற்றுண்டில் வந்தார்கள். அவர்கள் மொழிகளில் வசனநடை மிக வளர்ச்சியடைந்திருந்தது. தமிழைப் பயிலாத அளவில் தமது சமயத்தைப் பரப்பும் வாய்ப்பு தமக்கு இல்லை என அவர்கள் கண்டார்கள். இத்தொண்டுதலிஞல் தமிழைக் கற்றுத் திறமை பெற்று விளங்கியவர் கொன் தான்தியஸ் பிஸ்கி என்னும் இத்தாலியர். இவர் வீரமாமுனிவர் எனவும் அறியப்படுவர். உள்ளூர்ச் சமய போதகர்களை வசனநூல்கள் எழுதப் பழக்குவதற்கு முன்மாதிரியாக அவர் சில தமிழ் நூல்களை எழுதிஞர். அவை இலக்கியம் பயின்ற மாணவருக்கு இன்பம் அளிப்பன வாயிருந்தன. அவரது வசன நடையில் பல குறைபாடுகள் இருந்தபோதிலும் அது வசனநடை வளர்வதற்குக் காலாக விருந்தது. வீரமா முனிவருக்கு முன்னிருந்த வசனநூல்கள் வசனக் கலைக்கு எடுத்துக்காட்டு ஆகமாட்டா. வீரமா முனிவர் செய்த நூல்களுள் வேதியர் ஒழுக்கம், அவிவேக பூரண குரு கதை முதலியன குறிப்பிடத்தக்கவை. இந்நூல்கள் தமிழ் இலக்கணத்தை மாத்திரம் கற்ற ஒரு அன்னியர் எவ்வகைத் தமிழ் வசனநடை எழுத முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

வீரமாமுனிவருக்கு இருபது ஆண்டுகளின் பின் வாழ்ந்த சிவஞான முனிவர் வசனநடையைத்

தொடக்கியவர் எனலாம். இவர் போக்கையே பின்பற்றிக் கண்டனங்களும் சைவ மடங்களின் நூல்களும் எழுதப் பட்டன. வீரமாமுனிவர் சிவஞான முனிவர் என்னும் இருவரும் உயர்ந்த கல்வியறிவுடைய சமய போதகரேயாவர். சிவ ஞான முனிவரின் வசனநடை வித்துவான், பண்டிதர்களால் படித்து மகிழக்கூடியதா யிருந்ததே யன்றிப் பொதுமக்கள் கற்றறியக்கூடிய எளிமை யுடையதா யிருக்கவில்லை. இவர் உரையாசிரியர் கள் சென்ற போக்கினின்றும் விலக விரும்ப வில்லை. இவர் நடைக்கும் மேற்கு நாடுகளிலிருந்து வந்த பாதிரிமார் தோற்றுவித்த நடைக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு.

1826-ல் சென்னைப் பிரசிடென்சிக் கலாசாலை யில் தமிழ்ப் புலமை நடத்திய தாண்டவராய முதலியார் (1826) மராத்தி மொழியிலிருந்து பஞ்ச தந்திரக் கதையைத் தமிழில் மொழி பெயர்த்தார். இவர் நடையில் வீரமாமுனிவர், சிவஞான முனிவர் நடையிற் காணப்படாத சில மாறுதல்களைக் காண லாம். இவர் நடை விளக்கமும் எளிமையும் உடையது. ஆராய்ந்தெடுத்த முது மொழிகளை இவர் இடையிடையே ஆண்டுள்ளார். அதனாலும் அவர் நடை அழகுறுகின்றது. இவருக்குப்பின் வீராசாமிச் செட்டியார் (1826) விநோத இரச மஞ்சரி என்னும் நூலை எழுதினர். இவர் நூல் ஆண் பெண் என்னும் இரு பாலாராலும் பெரிதும் விரும்பப்பட்டது. மூலை முடுக்குகளிலிருந்த வசன

நூல்கள் இப்பொழுது அம்பலத்துக்கு வந்தன. இவருக்குப்பின் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் பல வசன நூல்களைச் செய்தார். உரையாசிரியர்களதும், சிவஞான முனிவரதும் உரை நடையிற் றேய்ந்த நாவலர் எவரும் விளங்கக்கூடிய முறையில் வசன நூல்களை வெளியிட்டது வியப்பளிப்பதேயாகும். தமிழ்க் கிறித்துவ வேதத்தை மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகளில் திருத்தி எழுத நேர்ந்தமைஅவருக்கு நல்ல வசனங்களை ஆக்கும் பழக்கம் அளித்திருக்கலாம். வீரமா முனிவர் தாழ்ந்த பொதுமக்களுக்காக எழுதினர். ஆகவே, அவர் நடை எளியநடையில் அமைந்துள்ளது. இவ்வாறு ஐரோப்பிய பாதிரிமார் வருகைக்குப் பின்தொட்டே தமிழில் வசன நூல்கள் எழுதப்படலாயின. இக்காலம் வசனகால மெனப்படுகின்றது.

வசனநடை சம்பந்தமாகப் பேராசிரியர் ஒருவர் எழுதியுள்ள பகுதியை இங்கு தருகின்றோம். அதில் பல அரிய செய்திகள் அறியக் கிடக்கின்றன.

" நூறு வருடமாகத்தான் வசன நடைக்கு ஒருவித கௌரவம் ஏற்பட்டுள்ளது, இதனைத் தமிழ் நூலார் 'உரை நடை' யென்பது, வெகுகாலமாக அஃது உரைகளில் மட்டுமே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வந்த காரணத்தினாற் போலும். பெருந்தேவனர் பாரதம் முதலிய

பழைய நூல்களில் வசனங்கள் காணப்படுமாயினும், அவை பொருளைப் புலப்படுத்துமாறு இடையிடையே வைக்கப்பட்டவையே; பிற்காலத்து எழுதி நுழைக்கப்பட்டவை என்று சொல்வாரும் உளர். வசன நூலெனத் தனிநூல் தோன்றி வெகு காலமாகவில்லை. தற்காலத்துள்ள 'கர்நாடக' பண்டிதருட் பெரும்பான்மையர் இலக்கண இலக்கியங்களில் எவ்வளவு தேர்ச்சி யடைந்தவராயினும், இம் என்னுமுன் ஈராயிரங் கவிபாட வல்லவராயினும், ஒரு பக்கம் வசன மெழுதவேண்டுமென்றால் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கின்றது; செய்தும், மலைகல்லி எலி பிடித்த கதைதான். இதனால், வசனம் எழுதுவதும் ஒரு வகை வித்தை யென்றும், மற்ற வித்தைகளைப் போலவே அதுவும் பயிற்சி யளவிற்குத் தக்க பலனைக் கொடுக்குமென்றும் அறிந்துகொள்ள வேண்டும். வசனநடையிலும் செய்யுள் நடையுண்டு; சிங்கார நடை ஒன்றுண்டு. உரையாசிரியர் நடை ஒரு விதமாயிருக்கும். இவை யெல்லாம் உளவாயினும் தமிழுக்கு அவசியம் வேண்டிய நடை ஒன்றே; அஃது எளிதிற் பொருள் விளங்குவதும், வாசிக்கையில் இனிய ஓசை தருவதும், வருந்தி எழுதாததும், இலக்கண வழுக்கள் மரபு வழுக்கள் இல்லாததுமாகிய செந்தமிழ்நடை.

வெகு காலத்துக்கு முன் எழுதப்பட்டன வென்று சொல்லத் தக்கனவாய்த் தமிழ் வசனங்கள் நூல்களிள் ஆங்காங்கே காணப்படினும், புலவர்

கள் வசனத்தைப் போற்றவில்லை யென்பது நிச்சயம். செய்யுள் செய்யும் முறைகளைப் பற்றி அனேக இலக்கண நூல்கள் ஏற்பட்டிருக்க, வசனம் எழுத வேண்டிய ஒழுங்கைப்பற்றி ஒரு சிறு நூல்தானும் காணப்படாமை இதனை உறுதிப்படுத்துகின்றதன்றோ? பழைய உரைகளிற் காணப்படும் வசனங்களெல்லாம் செய்யுள்களென்றே சொல்லப்படும் தன்மையன; சில இடங்களில் அவை ஞாபகத்திற்காக எழுதிவைக்குங் குறிப்புக்கள் போன்றிருக்கின்றன; அவ்வாறிருக்குந் தன்மையால் வசன ஒழுங்கோடு முற்றும் மாறுபடுகின்றன. அதனால், அவற்றை மாதிரி வசனங்களாகக் கொள்ளுதல் பொருந்தாது. சிவஞானயோகிகள் முதலிய தற்காலத்து ஆசிரியர் வசன நடைகளும் நூல் நுட்பம் அறியும் சாமர்த்தியமுடைய புலவர்க்கே பயன்படுவனவா யிருக்கின்றன. இவர்கள் நூல்களில் வாக்கியங்கள் சாமானிய கல்வியறிவுடையோரால் கிரகிக்கக் கூடாதபடி நீண்டிருக்கின்றன; திரி சொற்களும் சந்திகளும் நிறைந்திருக்கின்றன. இவற்றை வசன நடை வழுக்களென்றே சொல்லலாம். செய்யுள் நடை எப்படியிருப்பினும், வசன நடை எல்லார்க்கும் விளங்குந் தன்மையதாயிருத்தல் வேண்டும்.

நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் சிவஞான யோகிகளையும் பின்பற்றுவதாகச் சொல்லிச் சாமானியர்க்கு விளங்காத வசனங்கள் எழுதிக் களிக்கின்ற இந்நாட் புலவர்களைப்

பற்றி என் சொல்வது! பழைய நூல்களில் நடை வழுக்கள் காணப்படினும் அவற்றுட் பொதிந் திருக்கும் மாணிக்கங்களைக் காணும் பொருட்டுப் பொறுமை மேற்கொண்டு அவற்றைக் கற்றுணர் கின்றோம். அன்றியும், முற்காலத்தில், எளிமை யின் உயர்வு அவர்களுக்குத் தெரியாதிருந்திருக் கலாம். செய்யுள் நடையோடு பழக்க மிகுதியால் வேறுவகை வசனம் எழுதல் அவர்களுக்கு அசாத் தியமான செய்கையாயு மிருந்திருக்கலாம். இன்னும், அவ்வுரைகளைக் கற்கப் புகுவோர் கீழ்க் கடையில் அநேக நூல்களைக் கற்றபின் அவற்றின் அருகே செல்வர். பழைய நூல்களைக் கற்பதற்குச் சாவகாச மும் சாமர்த்தியமும் குன்றிய இக்காலத்தில் எளிய நடை எழுதுவதே முறையாகவும் முற்காலத்து நூல்களை மாதிரியாகக்கொண்டு 'உயர் நடை' எழுதுதல் அக்கிரமமன்றோ! 'எளிய நடை எழுது தல் நமக்குச் சாத்திய மன்று; யாம் எப்பொழுதும் பழைய நூல்களிலேயே பயின்றுள்ளோம்' என்று கூறுவது வீண் கர்வமன்றி வேறென்ன! ஆயி னும், ஒன்று சொல்லத் தக்கது. தற்காலத்தில் பழைய நடையைப் பின்பற்றி ஒருவர் எழுது வாராயின் அவர் எழுதுவதில் தொடர் எழுத்துக் களும் திரிசொற்களும் சந்திகளுமே நிறைந் திருக் கும்; சாரமாயுள்ள ஒன்றும் இராதென்பது நிச்ச யம்; அவர் எழுதுவதை வாசிப்போர் ஆயிரம் பேரில் ஒருவரே யாவர். இதர சாதியாரிடத்தும் இதர மதத்தாரிடத்தும் இதர மொழி வழியாற்

சம்பாதிக்கும் அரும் பொருளை எவராயினும் இக் கடியநடையில் அடக்கஞ் செய்வராயின், அச்செயல் தீச்செயலென்றே சொல்லத் தகும். அப்படிச் செய்யப்பட்ட நூலும் சில நாள் நின்று வாசிப் போரின்றி ஒழியும் என்று உறுதியாகச் சொல்ல லாம்.''*

## முற்காலக் கல்வி முறை

முற்காலத்தில் இன்று காணப்படுவது போன்ற கல்வி நிலையங்கள் இருக்கவில்லை. சிறுவர் ஆசிரியர்களை அடுத்துக் கல்வி பயின்றார்கள். சமீப காலம் வரையில் நடை பெற்ற திண்ணைப் பள் ளிக்கூடங்கள் முற்கால முறையைப் பின்பற்றி யனவே. மாணவர் ஆசிரியருக்குப் பலவகையான பணிவிடைகள் செய்து அவரிடம் கல்வி கற்றார்கள். ஆசிரியரின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் களை அவர் அவர் இயல்புக்கு ஏற்றவாறு கொடுத்து வந்தனர்.

> " உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே "

என்னும் பழைய பாடலினல் அக் காலக் கல்வி முறை எவ்வகையின தென்று விளங்குகின்றது.

பௌத்த குருமார் வடநாட்டினின்றும் வந்து தென்னட்டில் தமது மதத்தைப் பரப்ப முயன்ற னர். அப்பொழுது அவர்கள் தமிழ் மொழியைப்

---

* S. அனவரத விநாயகம் பிள்ளை. M. A., L. T.

பயின்றனர். அவர்கள் பௌத்த மடங்களில் சிறுவரைக் கூட்டிக் கல்வி கற்பித்தனர். இம்முறையையே பிற்காலக் கிறித்துவ பாதிரிமாரும் கையாண்டனர். சைன, பௌத்த துறவிகள் வாழும் மடத்துக்குப் பள்ளி என்று பெயர். இம் மடங்களில் கல்வி கற்பிக்கப்படுவது பொது நிகழ்ச்சியாகவிருந்தமையால் பிற்காலங்களில் கல்வி கற்பிக்கப்படும் நிலையங்களுக்குப் பள்ளி என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

அக்காலத்தில் பள்ளிகளில் சிறுவர் எப்படிக் கல்வி பயின்றார்கள் என்பதைப் பற்றி நன்னூல் என்னும் இலக்கண நூலிற் சொல்லப் பட்டிடிருக்கின்றது. சிறுவர் காலையில் பள்ளிக்குச் சென்றார்கள்; சென்று ஆசிரியரை வணங்கினார்கள்; ஆசிரியர் இரு என்று சொல்ல அவர்கள் இருந்தார்கள்; நில் என்று சொல்ல எழுந்து நின்றார்கள்; பின்பு ஆசிரியர் சொல்லும் பாடங்களை மிகக் கவனமாகக் கேட்டார்கள்; கேட்டவற்றை இருந்து சிந்தித்தார்கள்; மாணவர் தாம் கற்றவற்றை ஒருவரோடு ஒருவர் உரையாடித் தெளிந்தார்கள்.

இன்று நாம் பயன்படுத்தும் புத்தகங்கள் போன்றவை முற்காலத்தில் இருக்கவில்லை. மாணவர் எழுத்துக்களை மணலைப்பரப்பி அதன்மேல் வலக்கைச் சுட்டு விரலால் எழுதிப் பயின்றனர். எழுத்து எழுதப் பயின்றபின் பனை ஓலையில் எழுத்

தாணியால் எழுதப் பயின்றனர். சிறுவர் கையில் வைத்துப் பயிலும் நூல்கள் பனை ஓலை ஏடுகளில் ஆசிரியரால் எழுதி உதவப் பட்டன. பள்ளிகளில் பயிலும் கல்வி முடிந்தபின் உயர்தர கல்வி கற்க விரும்பியவர்கள் ஆங்காங்கு புகழ் பெற்று விளங்கிய நல்லாசிரியர்களை அடைந்து அவரிடம் சிலகாலம் கல்வி பயின்றனர்.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகைசெய்தல் வேண்டும்”

—பாரதியார்.

“ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர்ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்”